

குடியிருப்பு மனைப்பிரிவு

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், கோபாலசமுத்திரம் பேரூராட்சி, கோபாலசமுத்திரம் கிராமம், சர்வே எண்: 737/1B,737/2B2,737/4B,737/5,737/7 - ல் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்
(திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: 0OY3YBM3/2025
அளவு திட்டம் - 1:400

குறிப்புகள்:

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	= 16314.00ச.மீ.(4.03ஏக்கர்)
மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு	= 5497.80ச.மீ.
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	= 10816.20ச.மீ.
மனைப்பிரிவு இடத்தின் எல்கை	=
நிலையிலுள்ள சாலை	=
மனைப்பிரிவு சாலை	=
கோரிய மனைகளின் எண்ணிக்கை	= 81 மனைகள்
ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை (மனை எண்கள்: 1-81)	= 81 மனைகள்
EWS மனைகளின் பரப்பு (EWS மனை எண்கள்: 30 முதல் 50 வரை)	= 1205.00ச.மீ(10.93%)

(சாதாரண மனை எண்கள்: 1 முதல் 29 வரை, 51 முதல் 81வரை)

பொது ஒதுக்கீடுகள்:-

I) (உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் எண்:407/ 2025 நாள்:14.03.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி)

1) மனைப்பிரிவு சாலை	= 5497.80ச.மீ.
2) பூங்கா	= 1090.00ச.மீ(10.08%)
3) PUBLIC PURPOSE Ⓐ உள்ளாட்சி உபயோகம்	= 76.88ச.மீ(0.70%)
4) 3.0 மீ திறவிடம்-1	= 45.0ச.மீ
5) 3.0 மீ திறவிடம்-2	= 80.70ச.மீ

II) (மின்வாரியத்திற்கு தானப்பத்திரம் எண்:406/2025 நாள்:14.03.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதி)

1) PUBLIC PURPOSE Ⓑ (TANGEDCO)	= 75.00ச.மீ(0.68%)

மூலை முடக்கு-12.0மீ அகல சாலை வரை 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண்:134 நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:20.09.2002 -ன் படி மனுதாரது நிலஉரிமம் குறித்து சரிபார்ப்பது உள்ளாட்சியின் பொறுப்பாகும்.
2. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எந்தவித முன்அறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும்.
3. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்று உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6×4 என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.
7. இம்மனைப்பிரிவில் அருகில் இருக்கும் சர்வே எண்: 737/6B உள்ள கிணற்றை சுற்றி 1.5மீ உயரம் சுற்றுசுவர் மனுதாரரால் கட்டப்படவேண்டும்.

ம.வ/திலி.மா.ந.ஊ.எண்: SWP/21/2025

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்.